அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 36/96

எனது இல. 111/0266/2/58/எல்/எச்ஏ/
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 7
1996. 11. 01 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் - XXIV

---

வீடொன்றை நிருமாணிப்பதற்கு/வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான கடன் - 6/92 ஆம், 15/94 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளுக்கான விளக்கங்கள்.

---

தங்களின் கவனம் 1992.01.31 ஆந் தேதிய 6/92 ஆம் இலக்க 1994.01.26 ஆந் தேதிய 15/94 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை மீது கோரப்படுகிறது.

02. 6/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் உபபந்தி 11.21 பின்வருமாறு திருத்தப்படுகிறது.

11.21 வீடொன்றை நிருமாணிப்பதற்காக தற்போது கடன் வழங்கும் மற்றைய நிறுவனமொன்றிலிருந்து (வர்த்தக வங்கியிலிருந்து) அந்த வீடு நிருமாணிக்கப்படும் காணியை வங்கிக்கு ஈடுவைத்து கடன் பெற்றிருக்குமிடத்து, அந்த வீட்டின வேலைகளை பூர்த்தி செய்வதற்காக அரசிடமிருந்தும் கடன் பெறுவதாயின் வர்த்தக வங்கியிலிருந்து கடன் பெறுவதற்கான காரணம், கடன்தொகை, திகதி, மற்றும் குறித்த பணத்தொகை வீட்டு வேலைக்கு மாத்திரம் உபயோகிக்கப்பட்டதென்பதற்கான ஒரு சான்றிதழ் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். ஈட்டை எழுதிய நொத்தாரிசின் பெயர், பதிவு செய்யப்பட்ட அலுவலகம், மற்றும் திகதி என்பவற்றைக் கடன் பெற்றுக் கொண்ட நிறுவனத்தின் மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.

அரசிடமிருந்து கடன் பெறுவதற்கு முன்னராக கடனாளி குறித்த சொத்தை 2ஆம் ஈடாக (பின்னிணைப்பு 2இன்படி) சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு ஈடு வைக்க வேண்டுமென்பதுடன் அந்த உறுதியை ஈட்டுச் சட்டத்தின் 611 ஆம் உபபிரிவின்படி ஏற்புடைய மாவட்டக் காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட மூலப் பிரதி கடனை அனுமதிக்கும் அதிகாரிக்குச் சமர்ப்பித்த பின் கடன் பணம் வழங்கப்பட வேண்டும். பதிவு செய்யப்பட்ட ஈட்டுறுதியை பாதுகாப்பான முறையில் வைத்துக் கொள்வதில் திணைக்களத் தலைவர் பொறுப்பாகவிருக்க வேண்டும்.

..7

11.21.1 வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் தொகை அறவிடப்பட்டு முடிந்ததும் வர்த்தக வங்கியினால் அந்த ஈட்டை இரத்துச் செய்து அவ்வாறு இரத்துச் செய்ததை குறித்த காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய வேண்டுமென்பதை கடனாளியான உத்தியோகத்தர் அரசின் கீழ் சம்பளக் கடனை அனுமதிக்கும் அதிகாரியினூடாக தான் கடன் பெற்ற வர்த்தக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

11.21.2 வீடொன்றை நிருமாணிப்பதற்காக காணியொன்றை கொள்வனவு செய்வதற்கோ அல்லது வீட்டுச் சொத்தொன்றை பெறுவதற்காகவோ ஆகக் கூடியது 02 வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டு சம்பளக் கடன் பெற்றிருக்குமிடத்து, அந்தக் காணியில் வீடொன்றை நிருமாணிப்பதற்கோ அல்லது அவ்வாறு நிருமாணிக்கும் வீடொன்றின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காகவோ அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 15/94 இன் கீழ் மீண்டும் அரசிடமிருந்து கடன் பெறுவதாயின் அவ்விரு சந்தர்ப்பங்களிலும் பெற்றுக் கொள்ளும் மொத்தக் கடனுக்காக இணைப்பு -1 இல் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு அற்றோணித் தத்துவம் கையளிக்கப்பட வேண்டும்.

11.21.3 மேல் குறிப்பிடப்பட்ட 11.21.2 இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில அற்றோணித் தத்துவமளித்தலுடனான பிற்கால நடவடிக்கைகள் 6/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 11.19.1 ஆம் 11.19.2 ஆம் பிரிவுகளின்படி செய்ய வேண்டும். இவ்விடயத்தில் இரண்டாம் தடவையான கடனைப் பெற்றுக் கொண்ட அமைச்சின் செயலாளருக்கே அற்றோணித் தத்துவமளிக்கப்பட வேண்டும்.

ஒப்பம்: ஆர். எஸ். ஜயரட்ன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.

 

இணைப்பு - 1

ஒழிக்க முடியாத அத்தோர்னித் தத்துவ வரைவு
(இரண்டாம் கடன்பெறல் மீதானது)

ஒழிக்க முடியாத அத்தோனித் தத்துவம்

இத்தாற் சகலரும் அறிக.

........................................................................என்னும்
இடத்தைச் சேர்ந்த........................................................
ஆகிய நான் வாழ்த்துரைத்துத் தெரிவிப்பதாவது.

இத்துடனான அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனம், மனையிடங்களில் வீட்டை நிருமாணிப்பதற்கு/பூர்த்தி செய்வதற்கு எனக்கு உதவும் வகையில் நான்...... ..................ரூபாவைக் கொண்ட ஒரு தொகையை.......... ஆம் தேதியில் கடனாகப் பெற்றுள்ளேன். (இது இதனகத்து இனிமேல் இரண்டாம் கடன்பெறல் எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆதலாலும்;

சொல்லப்பட்ட கடன் பெறலுக்கு முன்னர் நான் அட்டவணையில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனம், மனையிடங்களைக் கொள்வனவு செய்வதற்கு எனக்கு உதவும் வகையில் ........................இடமிருந்து................ரூபாவை ..................ஆம் தேதியில் கடனாகப் பெற்றிருந்தேனாதலாலும் (இது இதனகத்து இனிமேல் முதலாம் கடன் பெறல் எனக் குறிப்பீடு செய்யப்படும்.) சொல்லப்பட்ட இரண்டாம் கடன் பெறற் தேதியில்................ரூபா மீதம் நிலுவையாக இருந்ததாலும்;

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தை (இது இதனகத்து இனிமேல், முதலாம் கடன் பெறல் தொடர்பில் குடியரசு எனக் குறிப்பீடு செய்யப்படும்.) பிரதிநிதித்துவப்படுத்தும்.......................................
...........................................................................
.......................................................அமைச்சின்
செயலாளரான ........................என்பவரின் சார்பாக.........
ஆம் ஆண்டு.........மாதம்.....ஆம் தேதியன்று ஒழிக்க முடியாத அத்தோனித் தத்துவம் ஒன்றை நிறைவேற்றியுள்ளேன் ஆதலாலும்;

குடியரசிலிருந்து அவ்வாறு என்னால் கடனாகப் பெறப்பட்ட முதலை அதன் மீதான வட்டியுடன், குடியரசின் சேவையில்நான் ஒரு பணியாள் என்ற வகையில் என்னால் பெறப்படும் வேதனக் கொடுப்பனவிலிருந்து அல்லது வேதனாதிகளிலிருந்து உடன்பட்டவாறு கழிக்கப்பெறும் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகளில் திருப்பிச் செலுத்த வேண்டுமென உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும்;

சொல்லப்பட்ட கடன்கள் அல்லது அவற்றின் எவையேனும் பகுதிகள் செலுத்தப் படாமல் இருக்கும் வேளையில் ஏதோ ஒரு காரணம் பற்றி சொல்லப்பட்ட குடியரசின் சேவையில் நான் பதவி வகிப்பது முடிவுறும் சந்தர்ப்பத்தில் சொல் லப்பட்ட ஆதனத்தை விற்று செலுத்தப்படாத எஞ்சியுள்ள கடன்களின் அத்தகைய தொகைகளை சொல்லப்பட்ட குடியரசுக்கு மீளச் செலுத்தி மீந்துள்ள தொகையை நான் உடன் பட்டபடி எனக்கு அல்லது எனது மரபுரிமையாளர்கள், நிறைவேற்று நர்கள் அல்லது மரணச்சொத்து நிருவாகிகளுக்குச் செலுத்துவதற்கு அவருக்கு உத வும் வகையில் 01 ஆம் 02 ஆம் கடன்பெறல்கள் இரண்டாம் தொடர்பில்..... ..........................................................................அமைச்சின் (தொடர்புள்ள அமைச்சு) செயலாளர்க்குச் சார்பாக ஒழிக்க முடியாத அத்தோ ணித் தத்துவம் ஒன்றை நிறைவேற்றுமாறு நான் இப்போது கேட்கப்பட்டுள்ளேன். ஆதலாலும்;

ஆகவே, இப்போது சகலரும் அறிவதாவது சொல்லப்பட்ட..................... ........................................................................ஆகிய நான் மேற்குறித்த வேண்டுகோளை அனுசரித்தும் என்னால் கடனாகப் பெறப்பட்ட மொத் தத் தொகையாகிய.............................................................ரூபாவை கருத்திற் கொண்டும் இத்தால்................................................ அமைச்சின் செயலாளராகிய.........................................................என்பவரை பதவியில் அவரது பின்னுரிமையாளரை அல்லது சொல்லப்பட்ட பதவியை அந்த நேரத்தில் வகிக்கும் ஆளை இத்துடனான அட்டவணையில் குறிப்பாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஆதனத்தை சொல்லப்பட்ட அத்தோணித் தத்துவகாரருக்கு விரும்பத் தக்கதென அல்லது தேவையானதெனத் தெரிகின்ற அத்தகைய விலையிலும் அத்தகைய விதத்திலும் விற்று உரிமை மாற்றி உறுதி எழுதுவதற்கு அத்தோணித் தத்துவகாரராக ஒழிக்க முடியாத பெயர் குறிப்பிட்டு செய்து, நிறுவி, நியமிக்கிறேன்.

சொல்லப்பட்ட பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் மேல் சொல்லப்பட்ட ஆதனத்தின் தேவையான அல்லது முறையான உரித்து மாற்றங்கள் காப்பீடுகள் அனைத்தையும் அதன் சொந்தக்காரர்கள், அவரின் மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், மரணசாதனத் தத்துவகாரர்கள், சாட்டுதல் பெறுநர்கள் ஆகியோரின் சார்பில் அல்லது சொல்லப் பட்ட சொந்தக்காரர் அல்லது அவரது மேலே குறிப்பிட்டு செய்யப்பெற்றவர்கள் வேறு வழியிற் பணித்தவாறு நிறைவேற்றுவது எனது செய்லும் கருமமுமாக அமையும்.

சொல்லப்பட்ட ஆதனத்தையும் அதன் வாடகைகள், தீர்க்க வேண்டிய பிரச்சினைகள், இலாபங்கள் ஆகியவற்றையும் அதில் அல்லது அத்துடனான எனது மரணச சொத்து உடமை உரித்து, அக்கறை அனைத்தையும் சொல்லப்பட்ட சொந்தக்காரருக்கும் அவரது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், மரண சாதன தத்துவக்காரர்கள் சாட்டுதல் பெறுநர்கள் ஆகியோருக்கு, உத்தேசங்கள் நோக்கங்கள் சகலமும் எவ்வாறு இருப்பி னும் முழுமையாக இந்த அத்தோணித் தத்துவத்துவம் செய்யப்படாமல் இருந்திருந்தால் நான் நேரில் பிரசன்னமாக இருந்திருந்து நானே செய்திருக்க வேண்டிய விதத்தில் முழுமையாகவும் பயனுறுதியுடனும் உடமையாக்கி அறுதி முடிப்பதற்கு தேவையானதென [illegible]

சொல்லப்பட்ட கடன்கள் அல்லது அவற்றின் எவையேனும் பகுதிகள் செலுத்தப் படாமல் இருக்கும் வேளையில் ஏதோ ஒரு காரணம் பற்றி சொல்லப்பட்ட . குடியரசின் சேவையில் நான் பதவி வகிப்பது முடிவுறும் சந்தர்ப்பத்தில் சொல் லப்பட்ட ஆதனத்தை விற்று செலுத்தப்படாத எஞ்சியுள்ள கடன்களின் அத்தகைய தொகைகளை சொல்லப்பட்ட குடியரசுக்கு மீளச் செலுத்தி மீந்துள்ள தொகையை நான் உடன் பட்டபடி எனக்கு அல்லது எனது மரபுரிமையாளர்கள், நிறைவேற்று நர்கள் அல்லது மரணச்சொத்து நிருவாகிகளுக்குச் செலுத்துவதற்கு அவருக்கு உத வும் வகையில் 01 ஆம் 02 ஆம் கடன்பெறல்கள் இரண்டாம் தொடர்பில். . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .அமைச்சின்
(தொடர்புள்ள அமைச்சு) செயலாளர்க்குச் சார்பாக ஒழிக்க முடியாத அத்தோ ளித் தத்துவம் ஒன்றை நிறைவேற்றுமாறு நான் இப்போது கேட்கப்பட்டுள்ளேன்.

ஆதலாலும்;

ஆகவே, இப்போது சகலரும் அறிவதாவது சொல்லப்பட்ட. . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .ஆகிய நான்
மேற்குறித்த வேண்டுகோளை அனுசரித்தும் என்னால் கடனாகப் பெறப்பட்ட மொத் தத் தொகையாகிய. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .ரூபாவை
கருத்திற் கொண்டும் இத்தால். . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
அமைச்சின் செயலாளராகிய. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .என்பவரை
பதவியில் அவரது பின்னுரிமையாளரை அல்லது சொல்லப்பட்ட பதவியை அந்த நேரத்தில் வகிக்கும் ஆளை இத்துடனான அட்டவணையில் குறிப்பாக விபரிக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஆதனத்தை சொல்லப்பட்ட அத்தோளித் தத்துவகாரருக்கு விரும்பத் தக்கதென அல்லது தேவையானதெனத் தெரிகின்ற அத்தகைய விலையிலும் அத்தகைய விதத்திலும் விற்று உரிமை மாற்றி, உறுதி எழுதுவதற்கு அத்தோளித் தத்துவகாரராக ஒழிக்க முடியாத பெயர் குறிப்பிட்டு செய்து, நிறுவி, நியமிக்கிறேன்.

சொல்லப்பட்ட பணம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் மேல் சொல்லப்பட்ட ஆதனத்தின் தேவையான அல்லது முறையான உரித்து மாற்றங்கள் காப்பீடுகள் அனைத்தையும் அதன் சொந்தக்காரர்கள், அவரின் மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், மரணசாதனத் தத்துவகாரர்கள், சாட்டுதல் பெறுநர்கள் ஆகியோரின் சார்பில் அல்லது சொல்லப் பட்ட சொந்தக்காரர் அல்லது அவரது மேலே குறிப்பிடு செய்யப்பெற்றவர்கள் வேறு வழியிற் பணித்தவாறு நிறைவேற்றுவது எனது செய்யும் கருமமுமாக அமையும்.

சொல்லப்பட்ட ஆதனத்தையும் அதன் வாடகைகள், தீர்க்க வேண்டிய பிரச்சினைகள், இலாபங்கள் ஆகியவற்றையும் அதில் அல்லது அத்துடனான எனது மரணச சொத்து உடமை உரித்து, அக்கறை அனைத்தையும் சொல்லப்பட்ட சொந்தக்காரருக்கும் அவரது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், மரண சாதன தத்துவக்காரர்கள் சாட்டுதல் பெறுநர்கள் ஆகியோருக்கு, உத்தேசங்கள் நோக்கங்கள் சகலமும் எவ்வாறு இருப்பி னும் முழுமையாக இந்த அத்தோளித் தத்துவத்துவம் செய்யப்படாமல் இருந்திருந்தால் நான் நேரில் பிரசன்னமாக இருந்திருந்து நானே செய்திருக்க வேண்டிய விதத்தில் முழுமையாகவும் பயனுறுதியுடனும் உடமையாக்கி அறுதி முடிப்பதற்கு தேவையானதென முறையானதென அல்லது உகந்ததென கருதக்கூடிய பிற எவையாக இருப்பினும் அவற்றை

மேற்குறித்த நோக்கங்கள் பொருட்டு சொல்லப்பட்ட எனது அத்தோனித் தத்துவகாரரினால் வழங்கப்பட்ட ஆக்கப்பட்ட, நிறைவேற்றப்பட்ட அல்லது செய்து முடிக்கப்பட்ட பெறுகைகள், விடுவிப்புகள், உரித்து மாற்றங்கள், சாதனங்கள், காப்பீடுகள், செயல்கள், கருமங்கள், அனைத்தும் அவை ஒவ்வொன்றும் உத்தேசங்கள், நோக்கங்கள் யாவற்றுக்கும் அவை எவையாய் இருப்பினும் அவை என்னால், நான் எனது சொந்தத்தில் முறையான ஆளாய் இருந்து கொண்டு கைச்சாத்திட்டு, நிறைவேற்று ஒப்படைத்து, வழங்கி அல்லது ஆக்கி அல்லது செய்து முடித்தாற் போல செம்மையானதாக, செல்லுபடியானதாக, பயனுறுதி வாய்ந்ததாக இருக்க வேண்டுமென நான் இத்தால் நெறிப்படுத்தி வெளிப்படுத்துகிறேன்.

பெறுமதியுள்ள பிரதியயன் பொருட்டு வழங்கப்படும் இந்த அத்தோனித் தத்துவம்; சொல்லப்பட்ட கடன்கள் மீது செலுத்த வேண்டிய பணங்கள் அனைத்தும் செலுத்தப்படும் அத்தகைய காலம் வரையில், மீளப்பெற முடியாததாக விளங்கும்.

இந்த அத்தோனித் தத்துவத்தின் பலம்கொண்டு மனையிடங்களில் அல்லது மனையிடங்கள் சம்பந்தமாக சொல்லப்பட்ட எனது அத்தோனித் தத்துவகாரர் சட்டமுறைப்படி செய்யும் அல்லது செய்விக்கும் எதனையாவது காலத்துக்குக் காலம் எல்லா நேரங்களிலும் வலுப்படுத்தி உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பை நான் இத்தால் ஏற்றுக் கொள்கிறேன்.

என்னால் பெறப்பட்ட முதலாவது கடன் பெறுகை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட முன்னைய அத்தோனித் தத்துவம் எல்லா நோக்கங்களுக்கும் இந்த அத்தோனித் தத்துவத் திகதியிலிருந்து செல்லுபடியற்றதும் பயனுறுதியற்றதும் ஆகிவிடும், அத்துடன், இந்த அத்தோனித் தத்துவம், சொல்லப்பட்ட குடியரசிலிருந்து என்னால் (01 ஆம், 02 ஆம் கடன் பெறல்களின் போது) கடனாகப் பெற்ற மொத்தப் பணத்தொகை தொடர்பில் செயல்வலுப்பெறும்.

---

இதற்குச் சாட்சியாக நான் 19.......... ஆம் ஆண்டு.......... மாதம் ....... ஆம் திகதியாகிய இன்று ................................ இல் எனது கையொப்பத்தை இடுகிறேன்.

..............................

கையொப்பம்

சாட்சிகள்

1. ........................

2. ........................

இணைப்பு - 2

## கடன் ஈட்டுப் பத்திரம்

இத்தால் சகலரும் அறிக.

..........................................................................என்னும்
முகவரியைச் சேர்ந்த...............................................ஆகிய
நான் இலங்கையின் சட்டரீதியான.........................ரூபா கடனுக்கு விண்
ணப்பித்து கடன் பெறுநர் என்ற முறையில் கடன் வழங்குநரான இலங்கை சனநாயக
சோசலிசக் குடியரசினைப் (இது இதனகத்து இனிமேல் குடியரசு எனக் குறிப்பீடு
செய்யப்படும்) பிரதிநிதித்துவப்படுத்தும்.....................................
..........அமைச்சின் செயலாளரான.........................................
.....................(அந்தப் பதவியை வகிக்கும் அல்லது அந்தப்
பதவியிற் பதிற் கடமை ஆற்றும் உத்தியோகத்தரின் பெயர்) என்பவரிடமிருந்து
அல்லது அவரது பின்னுரிமையாளரிடமிருந்து சொல்லப்பட்ட பணத்தை இன்று எண்ணிப்
பார்த்து முறைமையாகவும் உண்மையாகவும் ஏற்றுக் கொண்டுள்ளேன்.

ஆதலின், நான் பணத்தை எண்ணி ஏற்றுக் கொள்ளவில்லை என்ற கூற்றின் நன்மையை
துறந்து கொண்டு சொல்லப்பட்ட கடனைப் பெற்றவர் என்ற முறையில் சொல்
லப்பட்ட கடனின் சொந்தக்காரரான குடியரசுக்கு அல்லது அதன் பின்னுரிமையாளர்
களுக்கு, அத்தோனித் தத்துவக்காரருக்கு, பெறுநர்களுக்கு கடன் தொகையையும்
அதனோடு சேர்க்கப்படவுள்ள ஆண்டொன்றுக்கான...............சத வீதத்தில்
அமைந்த இன்று முதல் கடனை முழுமையாகத் தீர்க்கும் திகதி வரையிலான வட்டி
யையும் (ஈண்டு நிபந்தனை வாசகம் ஒன்று சேர்க்கப்படுதல் வேண்டும். அதாவது
கேட்ட நேரத்தில் அல்லது ..............மாதங்களுக்கு ஒரு முறை.......
........ரூபாத் தவணைக் கட்டணங்களில் முதல் தொகையையும் வட்டியையும்
முறைப்படி அறிவித்த பின்னர்.............முழு ஆண்டுகள் முடியுமுன்னர் அல்லது
...................... மாதங்கள் முடியும் முன்னர் போன்றவை) கொடுப்பேன்
என்று இத்தால் ஐயமற உறுதியளிப்பதோடு எனது சார்பில் என்னையும் மரபுரிமை
யாளர்களையும் நிறைவேற்றுநர்களையும், மரணச் சொத்து நிருவாகிகளையும் சாட்டுதல்
பெறுநர்களையும் கட்டுப்படுத்துகிறேன்.

மேலும், ஈண்டு சொல்லப்பட்ட கடன்தொகையையும் மேலே விபரித்தவாறு அதன்
மீது சேர்ந்துற்ற வட்டியையும் கொடுப்பதற்கான பிணையாக, ஈண்டு கீழே அட்டவணை
யில் விபரிக்கப்பட்டுள்ளதும் நான் சட்ட ரீதியான உரிமையோடு பிணைக்கெதுவுமின்றி
ஆட்சி செய்கின்றதும்...........................................
.....என அழைக்கப்படுகின்றதுமான காணியையும் அதன் மீதுள்ள அனைத்தையும்
19......ஆம் ஆண்டு........மாதம் ........ஆம் திகதியில் பிரசித்த
நொத்தாரிசான திரு...........................என்பவரால் உறுதிப்படுத்

தப்பட்ட .................. ....ஆம் இலக்க ஈட்டின் மூல அல்லது முதலாம் உறுதிக்கு அமைவாக, கடன்பெறுநரான என்னால் பிரயோகிக்கப்பட்ட எனது உரிமைகள், உரிமைக் கோரிக்கைகள், தத்துவங்கள் யாவற்றுடனும், சொல்லப்பட்ட முதலாவது ஈட்டைத் தவிர வேறு தடைகள் எவையும் இல்லாத இரண்டாவது ஈட்டை நிறைவேற்றுவதன் மூலம் இத்தால் சொல்லப்பட்ட கடனின் சொந்தக்காரரான குடியரசுக்கும் அதன் பின்னுரிமையாளருக்கும் கட்டுப்பட்டுக் கையளிக்கின்றேன்.

மேலும், கடன் பெறுநராகிய நான் ஈடுவைத்த இந்த ஆதனத்தை பிணிப்பதற்குச் சட்டமுறையான தத்துவம் கொண்டுள்ளேன் என இத்தால் உறுதிப்படுத்துவதோடு. ஈட்டின் இந்தப் பிணிப்புக்கு எதிராகச் செல்லக் கூடிய அல்லது காணியைப் பராதீனப்படுத்தக்கூடிய செயல் எதனையும் நான் புரிந்திருக்கவில்லை எனவும் வெளிப்படுத்துகின்றேன். மேலும் நான், ஈட்டினால் பிணிப்புற்றுள்ள இந்த ஆதனத்தை அதற்குப் பெறுமானக் குறைப்பு உண்டுபண்ணக் கூடிய அல்லது அதன் தற்போதைய நிலையை அழிக்கக் கூடிய முயற்சி வகைகள் அனைத்தையும் தவிர்ப்பதன் மூலமும் பாதுகாப்பதற்கு வாக்குறுதி அளிப்பதோடு என்னையும் பிணிப்புறுத்துகின்றேன். மேலும் நான் பிரதான கடனின் சொந்தக்காரர் என்ற முறையில் என்னையும் எனது மரபுரிமையாளர்களையும் குடியரசுக்கும் அதன் பின்னுரிமையாளர்களுக்கும் பிணிப்புறுத்துகின்றேன்.

## மேலே குறிப்பிட்ட அட்டவணை

இதற்குச் சாட்சியாக,

ஆயிரத்துத் தொளாயிரத்து.......................ஆம் ஆண்டு.......... .........மாதம்.........ஆம் திகதி ஆகிய இன்று இதிலும் இதே பகர்ப்பு தேதியும் கொண்ட வேறு இரு பிரதிகளிலும் கையொப்பமிடப்பட்டுள்ளது.

சாட்சிகள்

1. ..............
2. ..............